# நான் தேடினேன் என் இயேசுவே

நான் தேடினேன் என் இயேசுவே
உன் வரம் வேண்டினேன் அருள் நாதனே - 2
என் வாழ்வின் ஒளியாக நீயாக வேண்டும்
என் வானில் கதிரே என் தேவனே

1
மேலான அன்பாக நீயாகி நின்றாய்
உன் வார்த்தை என் வாழ்வில்
பொருளாகுமே - ( 2 )
என் அன்பே வா வா
என் பலமாய் வா வா - ( 2 )
என் வாழ்க்கை ஓடம் தடுமாறும் நேரம்
கரைசேர்க்கும் சுடராக இறையே நீ வா வா
( நான் தேடி)

2
வழியோரம் வாழ்கின்ற எளியோர்கள் இறைவா
விழியோரக் கண்ணீரை உன் பாதம் வைக்கின்றேன்-( 2 )
நிழலாக சோகம் தொடர்கின்ற போது –( 2 )
துயர் நீக்கும் மருந்தாக தலைவா நீ வா வா
வான் சோக்கும் கரங்கள் உருவாக வா வா ( நான் தேடி)